# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## அசல் வழக்கு எண். 299/2022

பெயர் : செல்லம்மாள் (PW1)

த/க/பெ. :

தேதி : 12.06.2024.

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**3 மற்றும் 10 வது தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். நான் வேறு பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். எத்தனை அயிட்ட சொத்து என்பது நினைவில்லை. வழக்கு முதல் அயிட்ட சொத்து என் கணவர் வாங்கிய பிறகு என் பெயரில் பட்டா கொடுத்தார்கள். அந்த சொத்தை என் மருமகள் 10 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பதிவு அலுவலகத்தில் கிரயம் செய்து கொடுத்துவிட்டு தற்போது இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சொத்தை கிரயம் கொடுத்துவி்ட்டு கொடுக்கவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதலட் அயிட்ட சொத்து 10 ம் பிரதிவாதி கிரயம் பெற்று பட்டா மாற்றம் அவர் பெயரில் சொல்லப்பட்டுள்ளதால் நான் பாகம் கேட்க முடியாது அவருடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான் எழுதி கொடுத்த கிரய ஆவணம் செல்லாது என்ற சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் தற்போது வழக்கு போட்டுள்ளேன். உண்மையிலேயே என்னை ஏமாற்றி கிரயம் வாங்கியிருந்ந்தா்ல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் கிரயம் கொடுத்துவிட்டு தற்போது என் மகன்களுடன் சேர்ந்து பொய்கட்சி ஆடுகிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி பதிவு செய்யப்பட்ட அந்த ஆவணம் செல்லாது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரில் என் கணவர் வாங்கி வைத்த சொத்துக்கள் வழக்கு 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் மகன்களின் நலனுக்காக அவர்கள் பெயரிலேயே கிரயம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அவர்கள் மேஜர் ஆனதும் சொத்துக்களை அடைந்து தனிப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனவே 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் சொத்துக்களில் நான் பாகம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. 4 வது அயிட்ட சொத்து என் கணவர் பெயரில் உள்ளதால் அதில் தான் எனக்கு பாகம் கேட்க உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 3 அயிட்ட சொத்தக்கள் குடும்ப பொது சொத்துக்கள் அல்ல என்றாலும் 3 மற்றும் 4 , 10 பிரதிவாதிகளின் தனிபட்ட சொத்து என்றால் சரியல்ல,, அவை அவர்களின் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளது

என்றால் சரியல்ல. இதனால் கூட்டு அனுபவம் என்ற பெயரில் செலுத்தியுள்ள நீதிமன்றகட்டனம் தவறு என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி தூண்டுதல் பேரில் நான் எழுதி கொடுத்த கிரய ஆவணம் செல்லாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் பெயரில் கிராமத்தில் 510/2A சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை சேர்க்காததல் வழக்கை தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நல்ல மன நிலை மற்றும் உடல் நிலையில் 10 பிரதிவாதிக்கு சொத்தை எழுதி கொடுத்துவிட்டு தற்போது உடல்நிலை சரியில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. உடல் நலம் குறித்த மருத்துவ ரசீது வைத்துள்ளேன் அதனை தாக்கல் செய்யவில்லை நான் பொய்யாக சொல்வதால் தான் ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய கூடியது என்றால் சரியல்ல.